செ.வெ.எண் :41/அக்டோபர் நாள் : 16.10.2019

## இராமநாதபுரம் மாவட்டம்

## டெங்கு உள்ளிட்ட வைரஸ் காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கான கொசுப்புழு ஒழிப்பு நடவடிக்கைகள்

## மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகராட்சிகுட்பட்ட வெளிப்பட்டிணம் பகுதியில் இன்று (16.10.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள், டெங்கு உள்ளிட்ட வைரஸ் காய்ச்சல் பரவாமல் தடுத்திடும் விதமாக நகராட்சி நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் கொசுப்புழு ஒழிப்பு நடவடிக்கைகளை நேரிடையாகச் சென்று ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. இன்றைய (16.10.2019) மழையளவு அறிக்கையின்படி மாவட்டத்தில் மொத்தம் 505.60 மி.மீ மழை அளவு பதிவாகியுள்ளது. மாவட்டத்திலுள்ள 9 வருவாய் வட்டங்களில் சராசரியாக 31.60 மி.மீ மழை அளவு பதிவாகியுள்ளது. அதிகபட்சமாக மண்டபம் பகுதியில் 114.20 மி.மீ. அளவும், பாம்பன் பகுதியில் 102.40 மி.மீ. அளவும் மழை அளவு பதிவாகியுள்ளது.

இந்நிலையில், மாவட்ட நிர்வாகத்தின் மூலம், மழைக்காலங்களில் ஏற்படக்கூடிய டெங்கு, மலேரியா போன்ற வைரஸ் காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி என அனைத்து உள்ளாட்சி அமைப்புகள் சார்ந்த அலுவலர்கள் மூலமாக அந்தந்த பகுதிகளில் மழைநீர் தேங்காமல் சுத்தமாக பராமரித்து சுற்றுப்புறத் தூய்மை பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட வெளிப்பட்டிணம், லெட்சுமிபுரம் பகுதிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரிடையாகச் சென்று நகராட்சி நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் கொசுப்புழு ஒழிப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்தார்.

ஆய்வினைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், கொசுப்புழு உற்பத்தி தடுப்பு களப்பணியாளர்கள் மூலமாக ஒவ்வொரு வீடுகளுக்கும் நேரடியாகச் சென்று கொசுப்புழு உற்பத்திக்கான சாத்தியக்கூறுகள் உள்ள சூழ்நிலைகளை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்கள் தங்களது தினசரி பயன்பாட்டிற்காக சேமித்து வைத்துள்ள தண்ணீரை முறையாக மூடியிட்டு பராமரித்திட வேண்டும். சுற்றுப்புறத்தில் தண்ணீர் தேங்காமலும், பழைய டயர்கள், தேங்காய் ஓடுகள்,பிளாஸ்டிக் பாட்டில்கள் போன்ற குப்பைகள் சேராமலும் தூய்மையாக பராமரித்திட வேண்டும். குடிநீரை காய்ச்சி பருகிட வேண்டும் என பொதுமக்களுக்கு அறிவுரை வழங்கினார்.

மேலும், இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொதுமக்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கினார்.

இந்த ஆய்வின் போது இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் திரு.விஸ்வநாதன், இராமநாதபுரம் வட்டாட்சியர் திருமதி.கே.தமிழ்செல்வி உட்பட துப்புரவு ஆய்வாளர்கள் பணியாளர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**